[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2009 பிப்ரவரி 24

முற்பகல் 11-40

ஆகவே, இந்தத் திருட்டுபற்றி பல்வேறு தகவல்கள் காவல் துறையினருக்கு வந்திருக்கின்றன. அந்த அடிப்படையிலே விசாரணையை மேற்கொண்டிருக்கின்றார்கள். களவுபோன அந்த மரகதலிங்கம் வெகு விரைவிலே மீட்கப்படும் என்பதையும், அதற்காக உரிய நடவடிக்கை காவல் துறையினர்மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் நான் எடுத்துச் சொல்கிறேன்.

சமீபத்திலேகூட இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒருசில திருட்டுக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றிருக்கின்றன. அவற்றைப் பற்றியும் புலன் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. சமீபத்திலேகூட திருத்தணியிலே கடந்த வாரம் உண்டியல் திருடன் ஒருவன் கையும் களவுமாக சம்பவ இடத்திலேயே பிடிக்கப்பட்டு, காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த ஓராண்டுக்கு முன்னர் சென்னை மயிலை கபாலீசுவரர் திருக்கோயிலில் உண்டியல் திருட்டில் ஈடுபட்ட திருடன், 10 மாதங்களுக்குப் பிறகு மேற்கு வங்க மாநிலத்திலே கைது செய்யப்பட்டு, நம்முடைய காவல் துறையின் சார்பிலே இங்கே குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிறான்.

ஆகவே, இதுபோன்ற திருட்டுக்கள் ஒருசில நடைபெற்றாலும்கூட, நம்முடைய காவல் துறையினுடைய முழு ஒத்துழைப்போடு அந்தக் களவுகளெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுகின்ற சம்பவம் நடைபெறுகிறது என்பதைத் தங்கள்மூலமாக இந்த அவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

(ஈ) சேரன்மகாதேவி மற்றும் அம்பாசமுத்திரம் தொகுதிகளில் வாழைப் பயிர் சேதத்திற்கு நஷ்ட ஈடு கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9-10-2008 அன்று சேரன்மகாதேவி தொகுதி, அம்பாசமுத்திரம்

2009 பிப்ரவரி 24] [திரு. பா. வேல்துரை]

தொகுதிகளுக்குட்பட்ட கல்லிடைக்குறிச்சி, வீரவ நல்லூர், வெள்ளங்குடி, அத்தாழநல்லூர், திருப்புடைமருதூர், அரிகேசவநல்லூர், கிரியம்மாள்புரம், கூனியூர், காருகுறிச்சி, சேரன்மகாதேவி போன்ற பகுதிகளிலே கன்னடியன் கால்வாய் விவசாயிகளுக்கு மழை மற்றும் சூறைக்காற்றின் காரணமாக மிகப்பெரிய சேதம் ஏற்பட்டு, கிட்டத்தட்ட 15 இலட்சம் வாழைகள் முழுவதுமாகச் சாய்ந்து, விவசாயிகளுக்குப் பெருமளவில் சேதம் ஏற்பட்டது. அதை நான் பலமுறை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன். கடந்த முறை, கவர்னர் உரைக்கான சட்டமன்றக் கூட்டத்தொடர் நடந்தபோதும்கூட அதைக் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்திருந்தேன். இன்றுவரை விவசாயிகள் அந்த நஷ்ட ஈட்டுத் தொகை பெறாத காரணத்தினால் மிகுந்த வேதனையிலே இருக்கிறார்கள். நாங்கள் அவர்களைச் சந்திக்கவே முடியாத நிலையிலே விவசாயிகள் பெருமளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை இப்போது வைக்கிறேன்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் மிகப் பெரிய வெள்ளச் சேதம் ஏற்பட்டது. அந்த வெள்ளச் சேதம் ஏற்பட்டபோது, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து பார்த்து, ஹெக்டேருக்கு 4,000 ரூபாய் என்றிருந்த நஷ்ட ஈட்டை 7,500 ரூபாயாக உயர்த்தித் தந்து மிகப் பெரிய உதவியை விவசாயிகளுக்குச் செய்தார்கள். இப்போது சூறைக்காற்று மழையால் வாழைகளுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு நஷ்ட ஈடு கிடையாது என்ற ஒரு தகவலைச் சொல்கிறார்கள். எந்த வகையிலே நஷ்டம் ஏற்பட்டாலும் விவசாயிகளுக்கு நஷ்டம்தான். நெல்லுக்கு 4,000 ரூபாய் என்று இருந்ததை 7,500 ரூபாய் கொடுத்தது, அது ஒரு நான்கு மாதப் பயிர். வாழை என்பது ஓராண்டுப் பயிர். இதை இரண்டு மடங்காக வழங்க வேண்டும். ஹெக்டேருக்கு 7,500 ரூபாய் என்பதை 15,000 ரூபாயாக வழங்கினால்தான் விவசாயிகளைக் காக்க முடியும். 'இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லை என்று சொல்லுவதில்லை', அதேபோன்று, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று நாமெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதுவும் நம்முடைய அரசு, எந்த நஷ்ட ஈடு கேட்டாலும் இதுவரை இல்லையென்று சொன்னதே கிடையாது. நஷ்ட ஈடு கேட்டால் கண்டிப்பாகக் கிடைக்கும். அதுவும் நம்முடைய முதல்வர் அவர்கள் இன்றைக்கு எத்தனையோ பிரச்சினைகள் வருகிறபோது நஷ்ட ஈடு கேட்டால் இல்லை என்று

சட்டமன்றத்தில் சொன்னதே கிடையாது. எங்களுடைய ஏழை விவசாயிகளைக் காப்பாற்றுகிற வகையிலே கண்டிப்பாக நீங்கள் 15,000 ரூபாய் ஹெக்டேருக்கு வழங்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை வழங்கவில்லை என்று சொன்னால், அந்த விவசாயிகளைச் சந்திக்க முடியாது. ஏழை விவசாயிகளைக் காப்பாற்ற முடியாது. அந்த விவசாயிகளுடைய வாழ்வாதாரம் கெட்டுவிடும். எனவே, விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு 15,000 ரூபாயாவது நீங்கள் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய உரை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உட்காருங்கள்.

3. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2008-2009 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 65 முதல் 68 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை அவர்களின் கோரிக்கைக்கு அமைச்சர் பதில் சொல்கிறீர்களா? இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS